# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே





நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட

www.supeedsam.com



செவ்வாய்க்கிழமை 01.11.2022 | supeedsam.com | supeedsam@gmail.com


## யாழில் பின் கதவால்
# தப்பி ஓடிய நீதி அமைச்சர்

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் எற்பாட்டில், கடந்த யுத்த காலத்தில் இருந்து யாழ். மாவட்டத்தில் இழப்பீடுகள், காயமடைந்தவர்களுக்கான ஆவணங்கள் பெறுவதில் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் முகமாகவும் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மீளவும் வருகை தந்துள்ள மக்கள் தமது ஆவணங்களை இலகுபடுத்தும் முறையிலான நடமாடும் சேவை இன்று யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று காலை ஆரம்பமானது.

02 ஆம் பக்கத்தில்...





## மாவட்டச் செயலகத்துக்குள் நுழைந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச நேற்றும் இன்று பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று வருகின்றார்.

இந்த நிலையில் அமைச்சர் யாழ் மாவட்டச் செயலகத்தில் நேற்று காலை இடம்பெறும் முக்கிய கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ,யாழ் மாவட்டச் செயலகத்துக்கு அண்மையில் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.நீண்ட நேரமாகியும் அமைச்சர் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக,மாவட்டச் செயலகத்துக்கு வராத நிலையில்,காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்,செயலக கேட்போர் கூடத்துக்குள் தற்போது உள் நுழைந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## வியாழேந்திரன் உள்ளிட்ட நால்வரும் வழக்கில் இருந்து விடுதலை!!



இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்ட 5 பேரை விடுதலை செய்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2019 ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27 திகதி இராஜாங்க அமைச்சர் உட்பட பலர் கலந்து கொண்டு கல்லடி பாலத்தினை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

02 ஆம் பக்கத்தில்...

## ஓ.எம்.பி.அலுவலகமே வெளியேறு
### மன்னாரிலும் உறவுகள் போராட்டம்



மன்னாரில் உள்ள காணாமல்போனோர் அலுவலகத்திற்கு முன்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்றது.

குறித்த போராட்டத்தில் மனித உரிமைகள்

02 ஆம் பக்கத்தில்...

## நடமாடும் சேவையை குழப்பியதாக கஜேந்திரன் மீது குற்றச்சாட்டு!

தமக்கான சேவையினை குழப்பும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் செ, கஜேந்திரன் தலைமையிலான குழு செயற்பட்டதாக சேவை பெற வந்தவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின்

02 ஆம் பக்கத்தில்...



## டயானா கமகே வெளிநாட்டவர்

சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே இரட்டைக் குடியுரிமை பெற்றவர் அல்ல என்றும் வெளிநாட்டவர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை பெற்றிருப்பதைவிட வெளிநாட்டவர் நாடாளுமன்றத்தில் இருப்பது மிகவும் ஆபத்தானது என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் இரட்டைக் குடியுரிமை தொடர்பான விசாரணைகளை குடிவரவு குடியகல்வு திணைக்களம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இரட்டை குடியுரிமையை பஸில் கைவிடமாட்டார்!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ச, இரட்டைக் குடியுரிமையைக் கைவிடும் நிலைப்பாட்டில் இல்லை. - என்று மொட்டு கட்சி முக்கியஸ்தரும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல

Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen


## எமது பிள்ளைகளுக்கு நடந்ததைக் கூறுங்கள்; விலை பேச வேண்டாம்



( வாஸ் கூஞ்ஞ)

காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளை கண்டுபிடித்து தர முற்படுங்கள் அதற்காக எங்கள் பிள்ளைகளுக்கு விலை பேசாதீர்கள் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நடாத்திய கவனயீர்ப்பு போராட்டத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

மன்னாரில் காணாமல ஆக்கப்பட்ட அலுவலகத்தின் முன்னால் மன்னார்

02 ஆம் பக்கத்தில்...

## விலை குறைகிறது

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில் இன்று அல்லது நாளை எரிபொருள் விலை சூத்திரத்தின் பிரகாரம் எரிபொருள் விலையில் திருத்தம்

02 ஆம் பக்கத்தில்...

# இலங்கை, சவூதிக்கிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு சாத்தியங்கள்

## இரு தரப்புக்களும் கூடிய கவனம்



(ந.குகதர்சன்)

சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட், அண்மையில் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலிட் ஹமட் நாஸர் அல்டஸாம் அல்கதானியை சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில், இரு தரப்புக்களதும் சாதக விடயங்கள் தொடர்பில் சுமுகமாகக் கலந்துரையா டப்பட்டது. மேலும், பரஸ்பர ஒத்துழைப்புக்களைக் கட்டியெழுப்பச் சாத்தியமா ன விடயங்களிலும் கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் விஷேட தூதுவராக அமைச்சர் நஸீர் அஹமட் சவூதி அரேபியா சென்றிருந்ததன் பின்னணிகளில், இருதரப்பு இலக்குகளை முன்னோக்கி நகர்த்தி, அவற்றை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்வது தொடர்பிலும் இச்சந்திப்பு கவனம் செலுத்தியது.

இலங்கைக்கு சவூதி அரேபியா வழங்கி வரும் ஒத்துழைப்புகளுக்கு அமைச்சர் நசீர் அஹமட் நன்றி தெரிவித்தார்.

அத்துடன் உலக நாடுகளுடன் இணைந்து 2030 இல், சவூதி முன்னெடுக்கவுள்ள திட்டங்களுக்கு இலங்கை ஒத்துழைக்க காத்திருப்பதாகவும் அமைச்சர் இதன்போது உறுதியளித்தார். இச்சந்திப்பு, கொழும்பிலுள்ள சுற்றாடல் அமைச்சில் இடம்பெற்றது.

# கிண்ணியா ஆலங்கேணி பகுதியில் சடலம் மீட்பு

(ஹஸ்பர்)

திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆலங்கேணி கிராம சேவகர் பிரிவில் ஆண் ஒருவரின் சடலம் இன்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.



குறித்த சடலம் நேற்று (31) அதிகாலை 4.30 மணி அளவில் அலங்கேணி அம்மன் கோவில் அருகாமையில் இருக்கும் வீதி ஓரத்தில் இருந்து சுமார் 10 மீட்டர் தொலைவில் உள்ள கண்டல் காட்டு பகுதியில் மீட்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

குறித்த சடலம் கிண்ணியா கட்டையாறு பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய அப்துல் ரசாக் கலால்தீன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட இடத்திற்கு அருகாமையில் உள்ள கோழி பண்ணை ஒன்றில் கடந்த 8 வருட காலமாக வேலை பார்த்து வந்தவர் எனவும், அப்பண்ணையிலேயே இரவு நேரத்திலும் தங்குவதாகவும் அவருடன் வேலை பார்த்தவர் குறிப்பிடுகின்றனர்.

குறித்த பண்ணையில் அவருடன் வேலை பார்த்து வந்த நபர் ஒருவர் நள்ளிரவு பின்னர் அவரை காணவில்லை என வெளியில் தேடிய போது அவரது செருப்பு மாத்திரம் வீதியோரத்தில் இருந்ததை அவதானித்து மேலும் தேடிய போது வீதியிலிருந்து சுமார் பத்து மீட்டர் தூரத்தில் உள்ள கண்டல் காட்டுப் பகுதியில் இறந்த நிலையில் கிடந்ததாக விசாரனைகளின்போது குறிப்பிடுகின்றார்.

இது தொடர்பில் போலீசாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து மரண விசாரனை அதிகாரியின் அறிக்கையின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

குறித்த நபர் போதைப் பழக்கத்திற்கு உள்ளானவர் எனவும் 20 வருட காலமாக ஆலங்கேணி பகுதியில் இரண்டு இடங்களில் கோழி பண்ணையில் வேலை பார்த்து வந்தவர் எனவும் குறிப்பிடுகின்றனர்.

அவரது சகோதரர் ஒருவர் அவர் தொடர்பில் குறிப்பிடுகையில் அடிக்கடி அவருக்கு வலிப்பு நோய் ஏற்படுவதாகவும், குடிப்பழக்கம் இருக்கின்றது எனவும், இவருக்கு 3 பிள்ளைகள் உள்ளது அதில் ஒருவர் விஷேட தேவை உடையவர் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

குறித்த பகுதியில் பல வருடங்களுக்கு முன்னரும் இதே போன்று ஒருவர் இறந்ததாகவும் அங்குள்ளவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிண்ணியா போலீசார் மேற்கொண்டு வருகின்றனர்.



அக்கரபத்தனை பிரதேச சபையின் புதிய தலைவர் இராமன் கோபால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் முன்னிலையில் நேற்று (31) தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் இ.தொ.காவின் தேசிய அமைப்பாளர் ஏ.பி சத்திவேல், உபதலைவர் சச்சிதானந்தன், அக்கரபத்தனை பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட இ.தொ.கா முக்கியஸ்தர்கள் பலர் கலந்துக்கொண்டனர்.

தலவாக்கலை பி.கேதீஸ்

# எமது பிள்ளைகளுக்கு நடந்ததைக் கூறுங்கள்; விலை பேச வேண்டாம்

மாவட்ட காணாமல் ஆக்கப்படடோரின் உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

திங்கள் கிழமை (31.10.2022) காலை 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெற்ற இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மெசிடோ அமைப்பின் இணைப்பாளர் . பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இனையத்தின் (போரம்) மன்னார் மாவட்ட இணைப்பாளர் . வாழ்வுரிமை இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என பலர் இதில் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக மன்னார் மாவட்டத்தல்; காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் அமைப்பின் தலைவி மனுவேல் உதயச்சந்திரா தெரிவிக்கையில்;

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் எமக்குத் தேவையில்லையென ஏற்கனவே நாங்கள் வலியுறுத்தி வந்தோம்.

அப்படியிருந்தும் அவர்கள் இந்த அலுவலகத்தை திறந்து எங்களுக்க திணித்தனர். ஏற்கனவே நாங்கள் காணாமல் ஆக்கப்பட்ட ஆணைக்குழுவின் தலைவர் சாலியப் பீரீஸ் அவர்களை நேரடியாக சந்தித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சிலரின் விபரங்களை கையளித்து இருந்தோம்.

இவர்களை தேடிப் பார்த்து அவர்களின் விபரங்களை எமக்கு தரும்படி. ஆனால் இன்று வரை அதற்கான எந்த விபரங்களும் எமக்குத் தரப்படவில்லை.

இந்த நிலையில் முன்னையவர் மாற்றம் பெற்று சென்று விட்டார். இப்பொழுது ஒரு புதியவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் இன்றைய கூற்று எவரும் காணாமல் ஆக்கப்படவில்லை என்றும் காணாமல் போனவர்கள் யாவரும் வெளிநாடுகளுக்கு சென்று விட்டனர் என்றும் இதனால் இங்கு இவர்களுக்கு படுகொலை ஒன்றும் நடைபெறவில்லையென தெரிவித்துள்ளார். அப்படி இவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று விட்டார்கள் என்றால் நீங்கள் அவர்களின் விலாசம் தொலைபேசி இலக்கங்களைத் தந்தால் நாங்கள் சென்று அவர்களை தேடிப் பார்ப்போம் என தெரிவித்துள்ளோம்.

இதுமட்டுமல்ல காணாமல் போன எங்கள் பிள்ளைகளுக்கு மரண சான்று பத்திரமும் பணம் இரண்டு லட்சம் ரூபா தருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த சன்மானங்களையும் மரண சான்று தருவதற்கும் இவர்கள் யார் என்ற கேள்வியை கேட்டு நிற்கின்றோம்.

நீங்கள் தரும் இரண்டு லட்சத்துக்குப் பதிலாக நாங்கள் நான்கு லட்சம் ரூபா தருகின்றோம் நீங்கள் எங்கள் பிள்ளைகளை காட்டுங்கள் என தெரிவித்து நிற்கின்றோம்.

அப்படியில்லையென்றால் நீங்கள் எங்களுடன் கதையுங்கள் நாங்கள் உங்களுக்கு தக்க பதில் தருகின்றோம். எமது பிள்ளைகள் எவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டார்கள் என விரிவாக மீண்டும் உங்களுக்கு தெளிவுப் படுத்துகின்றோம். ஆகவே நீங்கள் எங்கள் பிள்ளைகளுக்கு விலை பேச வேண்டாம் என தெரிவித்து நிற்கின்றோம்.

நீங்கள் எங்களுக்கு தக்க பதில் தராவிட்டால் எங்கள் போராட்டம் இத்துடன் நிற்கப் போவதில்லை. இது தொடர்ந்து நடைபெறும் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அமைப்பின் தலைவி திருமதி மனுவேல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

# விலை குறைகிறது

மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவைகள் எரிபொருள் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் ஒவ்வொரு மாதமும் 1ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் எரிபொருட்களின் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே எரிபொருள் விலையில் இன்று அல்லது நாளை மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இதன்படி எரிபொருள் விலை குறைய வாய்ப்புள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நடமாடும் சேவையை குழப்பியதாக கஜேந்திரன் மீது குற்றச்சாட்டு!

ஒழுங்கமைப்பில் நேற்றைய தினம் திங்கட்கிழமை நடமாடும் சேவை நடைபெற்ற நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட செயலகத்தின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உள்ளிட்டவர்களுடன் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தினுள்ளும் நுழைந்து கோஷங்களை எழுப்பினர்.

இதனால் நடமாடும் சேவைக்கு சில மணி நேரம் இடையூறு ஏற்பட்ட நிலையில் பொலிஸார் போராட்ட காரர்களை மாநாட்டு மண்டபத்தில் இருந்து வெளியேற்றினர்.

அதன் பின்னர் நடமாடும் சேவை இடையூறு இன்றி தொடர்ந்தது. இந்நிலையில் சேவை பெற வந்திருந்தவர் ஒருவர் தெரிவிக்கையில், எமக்கான ஆவணங்களை பெறுவதற்கு நாம் கொழும்பு சொல்வதாயின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் சுமார் 15 ஆயிரம் ரூபாய் வரையில் செலவாகும்.

இந்த நிலைமையில், இந்த நடமாடும் சேவை ஊடாக இலகுவாக ஆவணங்களை பெற்றுக் கொள்ள முடியும் என இங்கே வந்திருந்த போது, நாடாளுமன்ற உறுப்பினரின் தலைமையில் சிலர் இங்கு வந்து போராட்டம் செய்தனர்.

நீதி அமைச்சருக்கு எதிராக நாடாளுமன்றில் குரல் கொடுக்க வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர் , மக்கள் சேவை நடைபெறும் இடத்தில் வந்து அதனை குழப்பும் முகமாக செயற்பட்டமை எமக்கான சேவைகளை தடுக்கும் நோக்கமாகவே நாம் கருதுகிறோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும் , அவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை வெளிப்படுத்த வேண்டும். இதில் எமக்கு எந்த மாற்று கருத்தும் கிடையாது. எமது உறவினர்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளனர்.

அதற்காக அமைச்சர் இல்லாத இடத்தில் மக்கள் சேவை இடம்பெறும் இடத்தினுள் அத்துமீறி நுழைந்து அதனை குழப்பும் செயற்பாடாக நாடாளுமன்ற உறுப்பினர் நடந்து கொண்டமை கண்டனத்திற்கு உரியதாகும் என தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் வசித்த நிலையில் மீள நாடு திருப்பியுள்ளோருக்கு , அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், கடவுச்சீட்டு போன்றவற்றை பெறுவதற்கு இலகுவாக இந்த நடமாடும் சேவை நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இரட்டை குடியுரிமையை பஸில் கைவிடமாட்டார்!

வெளிநாடு சென்றிருந்ததாலேயே 22 ஆவது திருத்தச்சட்டமூலம்மீதான விவாதத்தில் பங்கேற்கவில்லை. நான் நாட்டில் இருந்திருந்தால் நிச்சயம் ஆதரவாக வாக்களித்திருப்பேன். ஏனெனில் 19 ஆவது திருத்தச்சட்டம் மீண்டும் வர வேண்டும் என எமது கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ச வலியுறுத்தியிருந்தார்.

இரட்டை குடியுரிமை தடையால் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. 22 ஆவது திருத்தச்சட்டமூலம் வரும்போது அது தொடர்பில் பஸில் ராஜபக்சவிடம் கலந்துரையாடினேன்.

இதன்போது, இரட்டை குடியுரிமையை கைவிடும் முடிவை நான் தற்போதே எடுக்கப்போவதில்லை, எனவே, 22 குறித்து நீங்கள் முடிவை எடுங்கள். இது விடயத்தில் என்னை பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என பஸில் ராஜபக்ச குறிப்பிட்டார். இரட்டை குடியுரிமை இருந்தபோதுதான் முக்கிய தேர்தல்களை பஸில் ராஜபக்ச வழிநடத்தினார். தற்போது வழிநடத்துகின்றார்.

மக்கள் போராட்டத்தை சிலர் சந்தர்ப்பவாத அரசியலுக்கு பயன்படுத்திக்கொண்டனர். எமது தரப்பிலும் சில தவறுகள் இருந்திருக்கலாம். அவற்றை திருத்திக்கொண்டு முன்னோக்கி செல்வோம். – என்றார்.

# வியாழேந்திரன் உள்ளிட்ட நால்வரும்...

இதன்போது ஆர்ப்பாட்கார் மீது பொலிஸார் கண்ணீர் புகை தாக்குதல் நடத்தி வெளியேற்றிய நிலையில் குறித்த நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணைக்காக நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இதில் எதிராளியான மாநகர சபை உறுப்பினர்களான செல்வி மனோகரன் உயிரிழந்துள்ளதுடன் வழக்கு விசாரணைக்கு பொலிஸார் தொடர்ந்து சமூகமளிக்கவில்லை.

இதனால் அமைச்சர் உள்ளிட்ட 4 பேரையும் இந்த வழக்கில் இருந்து விடுவித்து வழக்கை தள்ளுபடி செய்வதாக நீதவான் அறிவித்தார்.

# ஓ.எம்.பி. அலுவலகமே வெளியேறு...

செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ், மன்னார் பொது அமைப்பு ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் என பலர் கலந்து கொண்டனர்.

நீதி இல்லாத நாட்டில் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் எதற்கு?, ஓ.எம்.பி.அலுவலகமே மன்னாரை விட்டு வெளியேறு என்ற கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு 2 லட்சம் ரூபாய் பணத்தை வழங்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்திற்கு அவர்கள் கண்டனம் வெளியிட்டனர்.

# யாழில் பின் கதவால் தப்பி ஓடிய நீதி அமைச்சர்

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்சவினால் இந்த நடமாடும் சேவை வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்த நிலையில் நீதி இல்லாத நீதி அமைச்சர் யாழ்ப்பாணம் எதற்கு வரவவேண்டும்,எமக்கு இழப்பீடு வேண்டாம் என தெரிவித்து யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அண்மையில் , காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அறிந்த அமைச்சர் சுமார்9.30 மணிக்கு நடமாடும் சேவையை ஆரம்பித்து விட்டு,மாவட்டச் செயலகத்தை விட்டு வெளியேறினார். இதனை அறிந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்,மாவட்டச் செயலக கேட்ப்போர் கூட்டத்துக்குள் நுழைந்த போராட்டம் மேற்கொண்டனர். அதன் பின்னர்.போராட்டக்காரர்கள் வெளியேற்றப்பட்டு.கேட்போர் கூடத்தில் அமைச்சரின் பங்குபற்றுதலுடன் நிகழ்வுகள் இடம்பெற்றுவருகிறது.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு

களஞ்சியத்தின் விஸ்தீரணம் 1512 சதுர அடி. நீளம் 42 அடி, அகலம் 35 அடி, உயரம் 18 அடி. அலுவலக அறை 170 சதுர அடி. குளியல் அறை, மலசலகூடங்கள் 02, நீர் வசதி, மின்சார வசதி , போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)



அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.

தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# அருந்ததி
இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி
இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25096 | வே | 1984**
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

**21276 | வே | 1993**
புத்தூர் | இந்து | B.Eng
Engineer
பூராடம் (தனுசு)
172 செ.மீ | செவ்: 02

**23671 | வே | 1991**
குரும்பசிட்டி | இந்து | B.Com
Jr.Executive @ Bank
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**25090 | வே | 1990**
நயினாதீவு | இந்து | Diploma
Branch in charge
அஸ்வினி (மேடம்)
167 செ.மீ | செவ்: 04

**21372 | வே | 1988**
உரும்பிராய் | இந்து | MBA
Sr.Finance Executive
அஸ்வினி (மேடம்)
180 செ.மீ | செவ்: 12

**21297 | வே | 1987**
அரசடி | இந்து | AAT
Managing Partner
உத்தரம் (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 12

**25081 | பி | 1986**
தெஹிவளை | இந்து | MD
Investigation Officer
பூராடம் (தனுசு)
167 செ.மீ

**20931 | வே | 1993**
சுந்தர்மடம் | இந்து
MBBS | Doctor
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ

**20733 | வி | 1992**
யாழ்நகர் | இந்து | BSc
Senior QS | Qatar
கேட்டை (விருச்சிகம்)

**23788 | வே | 1995**
வேலணை | இந்து | BD
Software Engineer
சித்திரை (துலாம்)
168 செ.மீ

**20538 | வே | 1989**
காரைநகர் | இந்து | B.Eng,
MBA | Electrical Engineer
விசாகம் (துலாம்)
170 செ.மீ | சூ.செவ்: 08

**21102 | வே | 1987**
மீசாலை | இந்து | BSc
Civil Engineer
பூசம் (கடகம்)
174 செ.மீ

**25087 | வே | 1986**
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

**21321 | வே | 1993**
புங்குடுதீவு | இந்து | BSc
Tech. Support Engineer
மூலம் (தனுசு)
185 செ.மீ | சூ.செவ்: 09

**25105 | வே | 1990**
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

**20706 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | BSc
Civil Engineer | UK
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ | செவ்: 12

**25102 | வே | 1989**
வேலணை | இந்து | HND
Realtor & Insurance
Executive | பூராடம் (தனுசு)
170 செ.மீ | சூ.செவ்: 03

**20850 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | BSc
Quantity Surveyor
பூராடம் (தனுசு) | UK
182 செ.மீ

**21324 | வே | 1987**
முல்லைத்தீவு | இந்து | BBA
Development Officer
கேட்டை (விருச்சிகம்)
177 செ.மீ | செவ்: 02

**21033 | கோ | 1992**
கைதடி | இந்து | BSc
Quantity Surveyor
புனர்பூசம் (மிதுனம்) | UAE
170 செ.மீ | செவ்: 07

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25099 | வே | 1983**
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

**21510 | வே | 1996**
இணுவில் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
169 செ.மீ | India

**20874 | வே | 1994**
வேலணை | இந்து | Reading
MBA | Audit Trainee
உத்தரட்டாதி (மீனம்)
156 செ.மீ | செவ்: 02

**23638 | வே | 1993**
கொழும்பு | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சூ.செவ்: 10

**20619 | வே | 1991**
யாழ்நகர் | இந்து | ACCA
Assistant Manager
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ

**21471 | வே | 1990**
நீர்வேலி | இந்து | MD, SLAS
Assistant Director
மிருகசீரிடம் (மிதுனம்)
163 செ.மீ | செவ்: 08

**21333 | வே | 1985**
தும்பளை | இந்து | BA
Assistant | Divorced
சித்திரை (துலாம்) | UK
152 செ.மீ

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
அஸ்வினி (மேடம்) | கனடா
156 செ.மீ

**20694 | வே | 1995**
நெடுந்தீவு | இந்து
BFA | Teacher
பூராடம் (தனுசு)
153 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**20883 | வே | 1993**
வேலணை | இந்து | HNDA
Development Officer
விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ | செவ்: 07

**21444 | வே | 1991**
திருகோணமலை | இந்து
MSc | Software Engineer
பரணி (மேடம்)
153 செ.மீ | செவ்: 08

**21105 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | MD
Development Officer
பரணி (மேடம்) | Divorced
165 செ.மீ | சூ.செவ்: 07

**21300 | வே | 1989**
சுழிபுரம் | இந்து | BSc
Dental Surgeon | சைவம்
கேட்டை (விருச்சிகம்)
157 செ.மீ | சூ.செவ்: 10

**23710 | வே | 1996**
நெல்லியடி | இந்து
BSc | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சூ.செவ்: 06

**21132 | கோ | 1994**
கைதடி | இந்து | Following
B.Com | Management
Assistant | சதயம் (கும்பம்)
156 செ.மீ | செவ்: 02
Divorced

**23749 | வே | 1993**
வவுனியா | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | Norway
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சூ.செவ்: 06

**23821 | வே | 1998**
வவுனியா | இந்து
A/L | Accountant
பூரம் (சிம்மம்)
154 செ.மீ | செவ்: 07

**20853 | கோ | 1999**
சுன்னாகம் | இந்து
A/L | Accountant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 08

## அருந்ததி பிரைவட் லிமிட்டட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்

# Pretty Feathers Beauty Salon Devi Thiyagu

# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி















# மோசடி செய்யப்பட்ட பிரிவேல்த் குளோபல் நிதி, திலினி பிரியமாலினியிடம் சிக்கியிருக்கிறதா?

## பாதிக்கப்பட்டவர்கள் அரசிடம் விசாரணை கோருகின்றனர்

(பாறூக் ஷிஹான்)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களிடமிருந்து 1750 மில்லியன் ரூபாய் அடங்களாக நாடு முழுவதிலும் 2000 மில்லியன் ரூபாய் அளவில் மோசடி செய்துவிட்டு கடல் வழியாக சட்டவிரோதமாக தமிழகத்தில் நுழைந்து சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரிவேல்த் குளோபல் நிதி நிறுவன பிரதானி ஷிஹாப் ஷரீப் அவரது பாரியார் பர்ஸானா மாக்கர் ஆகியோரை இலங்கைக்கு நாடுகடத்த வேண்டும் என பிரிவேல்த் குளோபல் பாதிக்கப்பட்ட அமைப்பினர் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு தரப்பினருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.



பிரிவேல்த் குளோபல் பாதிக்கப்பட்ட அமைப்பினர் (30) மாலை சாய்ந்தமருது பிரதேசத்தில் ஊடகங்களிடம் இது தொடர்பாக கருத்து வெளியிட்டனர். பிரிவேல்த் குளோபல் பாதிக்கப்பட்ட அமைப்பின் சார்பில் அங்கு கருத்து தெரிவித்த ஏ.றிஸ்வாட், ஏ.ஆர்.எம். ஜெமீல் ஆகியோர், பிரிவேல்த் குளோபல் நிதி நிறுவனத்தினால் பாதிக்கப்பட்ட 1400 குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியினால் நிர்க்கதியாகியுள்ளது. குருவி சேர்ப்பது போன்று சேமித்த பணம், வீடுகட்ட சேமித்த பணம், அங்கவீனர்களின் பணம் என பலரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளோம்.

ஷிஹாப் ஷரீப் அவரது பாரியார் பர்ஸானா மாக்கர் ஆகியோர் தொடர்பில் இந்தியாவில் நடைபெற்று வந்த நீதிமன்ற சட்ட நடவடிக்கைகள் முடிந்துள்ளதாக அறிகிறோம். சர்வதேச பொலிஸாரினால் தேடப்பட்டு வரும் இவர்களை இலங்கைக்கு நாடு கடத்துவது மூலம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள எங்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்கும் என்று நம்புகிறோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை கிட்டும் வகையில் இது தொடர்பில் நேரடியாக தலையிட்டு இவர்களை இலங்கைக்கு நாடு கடத்துமாறு ஜனாதிபதி அடங்களாக துறைக்கு பொறுப்பான அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் மட்டக்களப்பு, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை நீதிமன்றங்களில் இவர்களுக்கு எதிராக 100 க்கு மேற்பட்ட வழக்குகள் பதியப்பட்டுள்ளது. கடந்த 2020.09.10 அன்று பாராளுமன்றத்தில் கூட இது தொடர்பில் திகாமடுல்ல மாவட்ட எம்.பி ஹரிசினால் பேசப்பட்டது. 2020.11.08 அன்று பொலிஸ் ஊடக பேச்சாளர் இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார். சர்வதேச பொலிஸாரின் அறிவித்தாலும் வெளியிடப்பட்டுள்ளது. இப்படியான இந்த மோசடி விடயத்தில் ஜனாதிபதி தலையிட்டு உரிய நியாயத்தை பெற்றுத்தர வேண்டும். இது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு சற்று ஆறுதலாளிக்கும் விடயமாக அமையும். இதனால் பாதிக்கப்பட்ட நாங்கள் கடுமையான கஷ்டங்களிலும், மன உளைச்சலிலும் இருக்கின்றோம்.

அண்மையில் நிதிமோசடியில் சிக்கி பேசுபொருளாக மாறியிருக்கும் திலினி பிரியமாலினியிடமும் எமது காசு முதலீடு செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம். திலினி விடயத்தில் துரிதமாக செயற்படும் புலனாய்வு பிரிவு எங்களின் விடயத்திலும் அதே நிலையில் இயங்கினால் சிறப்பாக இருக்கும் என்று நம்புகின்றோம். இது விடயமாக நிறைய வழக்குகள் கிடப்பில் இருக்கிறது. எங்களுக்கு நீதியை பெற்றுத்தர சகலரும் முன்வர வேண்டும் என்றனர்.

## குடாக்கரை பிரதேசத்தில் முதன் முதலாக சிங்கள பயிற்சி பாடநெறி சான்றிதழ் வழங்கும் வைபவம்





(ரவ்பீக் பாயிஸ் )

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகம்மட் நௌபர் அவர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக கிராமியப் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனம் (ரெக்டோ) அனுசரணையுடன் குடாக்கரை பிரதேசத்தில் முதல் முறையாக இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி பாடநெறி நடைபெற்று சான்றிதழ் வழங்கும் வைபவம் திருகோணமலை வெள்ளைமணல் அல் அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இன் நிகழ்வில் ரெக்டோ நிறுவனத்தின் தலைவர் மதிப்புக்குரிய ஜெ.எம் அசார் ஆசிரியர் அவர்களுக்கு அவர்களுடைய ரெக்டோ நிறுவனத்தின் மூலம் செய்து வருகின்ற பல்வேறுபட்ட சமூக நலன் திட்டங்களை பாராட்டி திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகம்மட் நௌபர் அவர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இன் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ரெக்டோ நிறுவனத்தின் தலைவர் அசார் ஆசிரியர் உரையாற்றும் போது

திருகோணமலை மாவட்டத்தில் இளைஞர்கள் மற்றும் பெண்களை மொழித்திறன் மிக்கவர்களக மாற்றும் நோக்குடன் இரண்டாம் மொழி தமிழ் மற்றும் சுமார் 10 சிங்கள பயிற்சி பாடநெறிகள் ஆரம்பித்ததாகவும் அதில் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற்ற இரண்டு பாடநெறிகளும் நிறைவு பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் சான்றிதழ் பெற்ற மாணவர்களுக்கு இன்னும் பல துறைகளில் முன்னேற்றம் கண்டு வெற்றி பெற வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

இன் நிகழ்வில் விருந்தினர்களாக

திருகோணமலை அல் அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் ஏ.எம் அமீன், மூதூர் பிரதேச சபை உறுப்பினரும்,ரெக்டோ நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட முகாமையாளருமான ஏ.எஸ்.எம் தாணிஸ் உட்பட ரெக்டோநிறுவனத்தின் பொருளாளர் எஸ். நஹீம், மற்றும் சிங்கள பயிற்சி பாடநெறி வளவாளர் சுதர்சினி அமரசூரிய மற்றும் மாணவர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இன் நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் பல நடைபெற்றது இன் நிகழ்வினை இளம் சமூக சேவையாளர் ஐ. இம்ரான் அவர்கள் தொகுத்து வழங்கிமை குூறிப்பிடத்தக்கது.

## கல்முனை பிராந்தியத்தில் மார்பு புற்று நோய் சிகிச்சை நிலையம் ஆரம்பம்





கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் மார்பக புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் வாரம் தோறும் வெள்ளிக்கிழமை தினத்தில் விசேட வைத்திய ஆலோசனை வழங்கப்படுவதோடு மார்பக சத்திர சிகிச்சையும் நடைபெறவுள்ளதாக சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர்.ஏ.டபிள்யு.எம்.சமீம் தெரிவித்தார்.

கல்முனை பிராந்தியத்தில் அதிகரித்து வரும் மார்பகப் புற்றுநோயை கட்டுப்படுத்தும் வகையில் இந்த விசேட வைத்திய சேவை கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் அதற்கான தனியான சேவை நிலையமும் திறந்து வைக்கப்பட்டது. கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் திறந்து வைக்கப்பட்ட மார்பக புற்றுநோய் சிகிச்சை நிலைய திறப்பு விழாவில் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யு.எம்.சமீம் உட்பட வைத்தியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மார்பக புற்றுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் கண்டறியப்படுகின்ற போது ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தும் நிலையை விடுத்து நோயை வெளிப்படுத்தும் வெட்கித்தல் காரணத்தினாலும் கௌரவ மனோ நிலையாலும் இந்த நோயினால் பாரதூரமாக விளைவுகள் ஏற்படுகின்றன. இவ்வாறான நிலைமைகளில் இருந்து தவிர்க்கும் பொருட்டு இந்த ஏற்பாடு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் இத்திட்டத்தின் மூலம் ஆலோசனை சேவைகள் வழங்குவதற்கும் அவசர பரிசோதனைகள் நடாத்தி நோயின் அறிகுறிகள் பாதிப்பு குறித்து கண்டறிந்து அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்ளவதற்குமான நடவடிக்கை மேற்கொண்கொண்டுள்ளதாகவும் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யு.எம்.சமீம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்

## இன்று உலக பாரிசவாத தினத்தை ஒட்டி விழிப்புணர்வு நடைபவனி

( காரைதீவு நிருபர் சகா)

உலக பாரிசவாத தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் கல்முனை ஆதாரவைத்தியசாலை ஏற்பாட்டில் விழிப்புணர்வு நடைபவனி ஒன்று வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் விழிப்புணர்வு நடைபவனி இன்று (30) திங்கட்கிழமை இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து வைத்தியசாலையில் பாரிச வாதம் தொடர்பான விழிப்புணர்வு கூட்டமும் இடம்பெற்றது.

வைத்திய நிபுணர்கள் இதில் கலந்துகொண்டு விளக்கமளித்தார்கள்.




கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் இலவச கண் சத்திர சிகிச்சை முகாம்




(சம்மாந்துறை நிருபர் ஐ.எல்.எம் நாஸிம்)

உலக பார்வை தினத்தை முன்னிட்டு தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் .ஏ.ஆர்.எம் தௌபீக், கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம் றிபாஸ், சம்மாந்துறை ஆதாரவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம் ஹனிபா, ஆகியோரின் வழிகாட்டலின் கீழ்,

வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரின் பங்குபற்றுதலுடன் சம்மாந்துறை பிராந்தியத்தில் தேவையுள்ள மூவினத்தையும் சேர்ந்த சுமார் 100 பயனாளிகளுக்கு நேற்று (30) கண்புரை (Cataract) சத்திரசிகிச்சை செய்யும் நிகழ்வு நடைபெற்றது.

இதில் கம்பஹா வைத்தியசாலையை சேர்ந்த கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர். ஜே.டி. டயஸ், வைத்தியர். அசேல அபேதீர மற்றும் வைத்தியர். அஹமட் ஜெசா குழுவினருடன் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர். ஏ.ஆர். நியாஸ் அஹமட், கண் வைத்தியஉத்தியோகத்தர் வைத்தியர். அல் ஆமீன் றிசாத் மற்றும் வைத்தியர்கள், விஷேட தாதிய உத்தியோகத்தர்கள், விடுதி முகாமையாளர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், சுகாதார உதவியாளர்கள் அனைவரினதும் அர்ப்பணிப்பு மிக்க சேவை பாராட்டத்தக்கது.

இன் நிகழ்வுக்கு Assist RR நிறுவனம், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு, சம்மாந்துறை லயன்ஸ் கழகம், குபிஈஇ போன்ற அமைப்புக்கள் அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தது.

# கோட்டும் மழையில் உகந்தமலையில் மூன்று மணி நேர சூரசம்ஹாரம்






( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் சூரசம்ஹார நிகழ்வு கொட்டும் மழையில் ஆலய பிரதம குரு சிவசிறி சீதாராம் குருக்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆலய தலைவர் சுதுநிலமே திசாநாயக்க உதவி குரு சிவ சிறி கோபிநாத் குருக்கள் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உள்ளிட்ட சுமார் 500 பக்தர்கள் கலந்து கொண்டனர்.

சுமார் மூன்று மணி நேரம் கொட்டும் மழைக்கு மத்தியில் உக்கிரமாக போர் நடைபெற்றது.

இறுதியில் சமுத்திர கரையில் போர் நடைபெற்றது. பக்தர்கள் முற்றாக நனைந்து நனைந்து போரை கண்டுகளித்தனர்.

# தென்றல் எப்.எம் வழங்கி வரும் பொன்மாலைப் பொழுது




(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபணத்தின் தென்றல் எப்.எம் வழங்கி வரும் பொண்மாலைப் பொழுது 3 ஆண்டாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபணத்தின் ஆனந்த சமரக்கோன் கலையரங்கில் இந் நிகழ்ச்சியின் தயாரிப்பாளா், எஸ்.பி.பி. புகழ் பாடகர் மற்றும் அறிவிப்பாளா் மொஹமட் இர்பான் தலைமையில் நேற்று 30.10.2022 நடைபெற்றது.

இந் நிகழ்வில் சூர்யாவின் இசையில் பிரபல பாடகா்கள், பாடகிகள் சினிமாப் பாடல்களை பாடினார்கள். இந் நிகழ்வுக்கு பாராளுமன்ற உறுப்பிணா் இம்ரான் மஹ்ருப், கொழும்பு பிரதி மேயா் தினகரன பிரதம ஆசிரியா் செந்தில்வேலவா், சிரேஸ்ட அறிவிப்பாளா் சிவரஞ்சன் யோகராஜன், கலாநிதி கையும் உட்பட பல வர்த்தகர்களும் கலந்து சிறப்பித்தனா் அத்துடன் இசைக்கலைஞா்கள் அனுசரனையாளா்கள் பொன்னாடை மற்றும் விருதும் வழங்கி கௌரவிக்கபபட்டார்கள்.

# குரக்கன் கஞ்சி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

கெட்டபுலாவ கொலப்பத்தனை பாடசாலை மாணவர்களுக்கு குரக்கன் கஞ்சி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொத்மலை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. பாடசாலை மாணவர்களின் போசாக்கு நிலையை மேம்படுத்தும் நோக்கில் கொத்மலை முன்னாள் பிரதேச செயலாளர் திருமதி சுரங்கி பெரேராவின் பணிப்புரைக்கு அமைய இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# கருவிலே திருவுடையவர்களாக மாற்ற இந்த உதவி திட்டம்! பணம் இருந்தாலும் மனம் இருக்க வேண்டும்!

## நவபோச விநியோக விழாவில் வைத்திய அதிகாரி ராஜேந்திரன்!

(காரைதீவு சகா)

வித்தகன் விபுலானந்த அடிகள் தொடக்கம் பல பெரியோர்கள் காரைதீவில் கருவிலே திருவுடையவர்களாக இருந்தார்கள். அவ்வாறு இந்த மண்ணில் பிறக்கின்ற அனைத்து குழந்தைகளும் கருவிலேயே திரு உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக இந்த உதவியை பிரித்தானியாவில் இருந்து உதவியிருக்கின்றார்ஙள்.

உதவி நல்கியவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் .

இவ்வாறு கல்முனை ஆதார வைத்தியசாலையின் பிரதி வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் சமித்தம்பி ராஜேந்திரன் தெரிவித்தார்.

பிரித்தானிய மட்டக்களப்பு நலிந்தோர் அபிவிருத்தி சங்கத்தினரும் மட்டக்களப்பு மருத்துவ மனைகளின் நண்பர்கள் சங்கத்தினரும் இணைந்து நவபோசா போசாக்கு உணவுப்பொதியை வழங்கி வைத்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.





இந்த நிகழ்வு காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி டாக்டர் நடராஜா அருந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஐக்கிய ராஜ்ஜியத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு நலிவுற்றோர் அபிவிருத்தி சங்கம் (ஆக்ஈகு. க்ஓ) மற்றும் மட்டக்களப்பு மருத்துவமனைகளின் நண்பர்கள் சங்கம் (ஊநிஉ ஆஏ. க்ஓ) என்பவற்றின் நிதிப்பங்களிப்பில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட ஊட்டச்சத்து

குறைபாடுள்ள குழந்தைகளுக்கு 'நவபோச' சத்துமா வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம்(29.10.2022) சனிக்கிழமை காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இவ் வைபவம் காரைதீவு பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டாக்டர் நடராஜா அருந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கல்முனை ஆதார வைத்திய சாலையின் பிரதிவைத்திய அத்தியட்சகர் டாக்டர் சாமித்தம்பி இராஜேந்திரன், காரைதீவு பிரதேச

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர், காரைதீவின் சமூக சேவையாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து நவபோஷா பொதிகளை வழங்கி வைத்தனர்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரனிடம், காரைதீவின் சமூக சேவையாளர் வி.ரி.சகாதேவராஜா விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இருநூறு ''நவபோஸா'' பொதிகள் காரைதீவுக்கு வழங்கப்பட்டது.

அதன் பலனாக காரைதீவு பிரதேசத்தில் ஒரு தொகுதி தாய்மார்களுக்கான

சத்துமா பொதிகள் முதல் கட்டமாக வழங்கிவைக்கப்பட்டது.

அங்கு அவர் மேலும் பேசுகையில்..

சமகால பொருளாதாரம் நெருக்கடி காரணமாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வந்த திரிபோச சத்துணவு நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த வேளையில் நிலைமையை உணர்ந்து பிரித்தானியாவில் இருக்கக்கூடிய இந்த அமைப்பினர் இந்த நவபோசா சத்துணவை எமது அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் ஊடாக இந்த மக்களுக்கு வழங்கியமை மிகவும் பாராட்டுக்குரியது. இதற்கு உதவிய பரோபகாரிகளினா குடும்பங்கள் சிரஞ்சீவியாக வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றோம் நன்றி கூறுகின்றோம்.

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் பேசுகையில்..

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த எனது அன்பிற்குரிய ஊடகவியலாளர் சகா சார் அவர்களுக்கு நன்றிகள். இந்த உதவிகள் காலத்தின் கட்டாயமாக தேவையானது. இதற்கு உதவிய அமைப்பினருக்கு நன்றிகள் .பணம் இருந்தாலும் மனம் இருக்க வேண்டும். பிரித்தானியாவில் வாழ்கின்ற இந்த மட்டக்களப்பு அமைப்பினருக்கு நல்ல மனம் இருக்கின்றது. அவர்களை வாழ்த்துகின்றோம்.

இருநூற்று க்கும் மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் நவபோசா சத்துணவு பொதி வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் கல்முனை ஆதாரவைத்திய சாலையில் 800 பொதிகள் கல்முனைப் பிராந்திய கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை தெரிந்ததே.

# இளைஞர்களுக்கான நல்லிணக்க வதிவிடப் பயிற்சிப் பட்டறை




(எம்.என்.எம்.அப்ராஸ்)

ஜீ சேர்ப் (GCERF) நிதியுதவியுடன் ஹெல்விடாஸ் நிறுவனத்தின் அனுசரணையில் சமாதானமும் சமூக பணி (PCA) நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படும்

வை-சென்ச் தூ-ஞிடச்ணஞ்னு திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் உள்ள இளைஞர்கள் யுவதிகளை நல்லிணக்கத்திற்க்காக வலுவூட்டும் வகையில் வதிவிடப் பயிற்சிப் பட்டறை அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

இதனடிப்படையில் தனி மனித மாற்றம், முரண்பாட்டு முகாமைத்துவம், அதி தீவிர வன்முறையை தவிர்த்தல், சமூகத்தின் மத்தியில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தை மேம்படுத்தல் தொடர்பில் 03 நாள் வதிவிடப் பயிற்சி கடந்த (28,29,30) ஆம் திகதிகளில் பொத்துவிலில் இடம்பெற்றது .

இதில் வளவாலராக டி.மோசஸ் கலந்து கொண்டதுடன், சமாதானமும் சமூக பணி (PCA) நிறுவன வை-சென்ச் y&change திட்டத்தின் திட்ட முகாமையாளர் டி.ராஜேந்திரன், திட்ட இணைப்பாளர் ஜ.சுதாவாசன், நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்களான கே.டி. ரோகிணி, டப்ளியு. எம்.சுரேகா, எம்.எல்.ஏ.மாஜீத், சமாதான தொண்டர்களான டி.டிலக்சி, எம்.எஸ்.ரக்சானா,

மொழி பெயர்ப்பாளர் ஜே. நித்தியானாந்தன், உட்பட கல்முனை, கல்முனை வடக்கு, உஹன, நிந்தவூர் ஆகிய பிரதேச இளைஞர் நல்லிணக்கமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அதிகாரப்பகிர்வு விடயத்தில் இரட்டை நிலைப்பாட்டை கைவிடுக

## தமிழ் கூட்டமைப்பை கோருகிறார் ஹரீஸ் எம்.பி.

(செயிட் ஆஷிப்)

அதிகாரப்பகிர்வு விடயத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருக்கின்ற இரட்டை நிலைப்பாட்டை உடனடியாக கைவிட வேண்டும் என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்முனை விவகாரத்தில் விட்டுக்கொடுப்பு செய்வதற்கு தமிழ் தரப்பு முன்வராவிட்டால் இனப்பிரச்சினை தீர்வு மற்றும் அதிகாரப்பகிர்வு விடயத்தில் முஸ்லிம் சமூகம் புரிந்துணர்வோடு ஒன்றித்து பயணிக்க முடியாத துர்ப்பாக்கியம் ஏற்படலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமகால அரசியல் விடயங்கள் குறித்து ஞாயிற்றுக்கிழமை (30) கல்முனையில் ஒழுங்கு செய்யப்



பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் உட்பட மாநகர சபை உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டிருந்த இந்நிகழ்வில் ஹரீஸ் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்;

இந்த நாட்டில் மத்திய அரசுடன் முழுமையாக இருந்து நிர்வாகம் செய்ய முடியாது என்பதற்காகத்தான் 1948ஆம் ஆண்டு தொடக்கம் சமஷ்டி தீர்வின் அடிப்படையிலான அதிகாரப்பகிர்வின் ஊடாக வடக்கு, கிழக்கில் ஒரு தனியான நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என தமிழ் சமூகம் கோரி வருகின்றது. அதற்காக பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அதில் நியாயமும் இருந்தது. அதனால்தான் எமது பெரும் தலைவர் எம்.எச். எம்.அஷ்ரப், முன்னாள் செனட்டர் மசூர்மௌலானா போன்றோர்தமிழ் தலைமைகளுடன் இணைந்து அப்போராட்டங்களில் முக்கிய பங்காற்றியிருந்தனர். எங்களுடைய இப்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் கூட தமிழ் சமூகத்தின் அதிகாரப் பகிர்வுக்காக பாடுபடுகின்ற ஒருவராகவே இருக்கின்றார்.

இந்நிலையில்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் யாழ்ப்பாணத்தில் ஒரு கொள்கையுடனும் அம்பாறையில் இன்னொரு கொள்கையுடனும் செயற்படக்கூடாது என்று நான் வேண்டுகோள் விடுகின்றேன். மத்திய அரசின் கீழ் தமது நிர்வாகத்தை முழுமையாக செய்ய முடியாது என்பதற்காகத்தான் மாகாண நிர்வாக அதிகாரத்தை கோருகின்ற தமிழ் தரப்பினர், அம்பாறை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 67 சதவீதம் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் இங்கு மொழி ரீதியாக ஒரு கரையோர மாவட்டத்தை உருவாக்குவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றபோது, அதற்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு, அவ்வாறான ஒரு மாவட்டம் உருவாகிவிடக்கூடாது என்ற அடிப்படையில் உள்ளக அரசியலை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக கல்முனை விவகாரத்திலும் கூட தமிழ் பேசும் முஸ்லிம்களுடன் இணைந்து நிர்வாகம் செய்ய முடியாது எனக்கூறுகின்ற தமிழ் தரப்பினர், அம்பாறை மாவட்ட நிர்வாகம் என்று வருகின்றபோது தமிழ் மொழி ரீதியிலான கரையோர மாவட்டத்தை மறுதலித்து சிங்கள மொழி ரீதியிலான நிர்வாகத்தினருடன் இணைந்து செயற்பட தயார் என்கின்றனர். ஒட்டு மொத்தமாக வடக்கு, கிழக்கு என்று வருகின்றபோது பெரும்பான்மையின ஆட்சியையும் சிங்கள மொழியையும் நிராகரித்து வருகின்ற நிலையில்தான் கல்முனை மற்றும் கரையோர மாவட்ட விவகாரங்களில் மாற்று நிலைப்பாட்டை எடுக்கின்றனர். இத்தகைய இரட்டை நிலைப்பாட்டைத்தான் தமிழ் கூட்டமைப்பு கைவிட வேண்டும் எனக் கோருகின்றேன். தலைவர் சம்மந்தன் ஐயா, சுமந்திரன் எம்.பி. மற்றும் தமிழ் எம்.பி.க்களிடம் இதனை மிகவும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகின்றோம்.

இவ்விடயம் கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் புத்திஜீவிகள் மற்றும் இளைஞர்களை சிந்திக்க வைக்கின்றது. இதுவொரு நியாயமற்ற போக்கு, மனச்சாட்சிக்கு விரோதமானது. தமிழருக்கான அதிகாரப்பகிர்வுத் தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்ற முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான நிலைப்பாட்டை தமிழ் அரசியல் தலைமைகள் கொண்டிருப்பதானது முஸ்லிம்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தி இருக்கின்றது.

இந்த நிலை நீடிக்குமாயின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப்பகிர்வு விடயத்தில் தமிழ் சமூகத்துடன் முஸ்லிம் சமூகம் புரிந்துணர்வுடன் ஒன்றித்து பயணிக்க முடியாத துர்ப்பாக்கியம் ஏற்படலாம். குறிப்பாக கல்முனை விவகாரத்தில் விட்டுக்கொடுப்புடனான தீர்வுக்கு முன்வராமல் தமிழ் தரப்பு மறுக்கின்றபோது நிச்சயமாக தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் முஸ்லிம் சமூகம் வேறு திசைக்கு கொண்டு செல்லப்படலாம் என்ற செய்தியை சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

அதேவேளை, கல்முனை செயலக விடயத்தில் நாங்கள் எதுவும் செய்யாமல் மௌனம் காத்து வருவதாக எமது முஸ்லிம் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஆனால், நான் மற்றும் மேயர் உட்பட எல்லோரும் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எல்லா மட்டங்களிலும் செய்து கொண்டுதான் இருக்கின்றோம். அது தொடர்பிலான எல்லா விடயங்களையும் ஊடகங்களில் பறைசாற்றிக் கொண்டிருக்க முடியாது.

இந்த விவகாரத்தில் நாங்கள் பாரிய அழுத்தங்களுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். தலைவர் ரவூப் ஹக்கீமும் இந்த விடயத்தில் மிகவும் கரிசனையும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார். ஏனைய முஸ்லிம் எம்.பி.க்களுடனும் பேசியிருக்கின்றோம். அவர்களும் உரிய இடங்களில் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றனர்- என்று ஹரீஸ் எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பில் பால் பொருள் உற்பத்திகளின் தொழிற்சாலை திறந்துவைப்பு!!



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கையின் பால் பொருள் உற்பத்தியில் முக்கிய மாவட்டங்களில் ஒன்றாக கருதப்படும் மட்டக்களப்பில் பால் உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பால் உற்பத்தியில் முக்கிய மாவட்டங்களில் ஒன்றாக கருதப்படும் மட்டக்களப்பில் பால் மூலமான உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நேற்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு, செங்கலடி பிரதான வீதியில் இந்த பால்பொருள் உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம்

முன்னெடுத்துவரும் முதலீட்டாளர்களுக்கான ஆதரவு திட்டத்தின் கீழ் மட்டக்களப்பினை சேர்ந்த நடனபாதம் ஜெகதீசன் என்பவர் இந்த தொழிற்சாலையினை மீள ஆரம்பித்துள்ளார்.

இதன் திறப்பு விழா பால் உற்பத்திதொழிற்சாலையின் உரிமையாளர் நடனபாதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டதுடன் சிறப்பு அதிதிகளாக ஏறாவூர்ப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் எஸ்.சர்வானந்தன், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம், மட்டக்களப்பு வர்த்தக சங்க தலைவர் தேசபந்து மு.செல்வராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

சுமார் 20 கோடி ரூபா செலவில் இந்த பால் உற்பத்தி தொழிற்சாலை நவீன வசதிகளைக்கொண்டதாக மீள அமைக்கப்பட்டுள்ளதுடன் இந்த தொழிற்சாலையில் தூய பால், சுவையூட்டப்பட்ட பால், ஜோக்கட், தயிர், வெண்ணை, பன்னீர் உட்பட பாலிலிருந்து உற்பத்திசெய்யப்படும் பல்வேறு பொருட்களும் உற்பத்திசெய்யப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை பண்ணையாளர்களிடமிருந்து பால் கொள்வனவு செய்யப்பட்டு இந்த தொழிற்சாலையில் பால் உற்பத்தி பொருட்கள் உற்பத்திசெய்யப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு நாளைக்கு 40 ஆயிரம் லீற்றர் பால் உற்பத்திசெய்யப்படுகின்ற போதிலும் வெளி மாவட்டங்களிலிருந்து அதிகளவான பால் வாங்கப்படுவதனால் போக்குவரத்து செலவுகள் காரணமாக பண்ணையாளர்களிடமிருந்து குறைந்த செலவிலேயே பால் கொள்வனவு செய்யப்படுகின்ற காரணத்தினால் இதுவரை பண்ணையாளர்கள் எதிர்நோக்கிவந்த சந்தைப்படுத்தல் பிரச்சினை இந்த தொழிற்சாலை ஊடாக ஓரளவுக்கு தீர்வுகாணப்படுமென நம்பப்படுகின்றது.

இந்த தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பால் உற்பத்தி பொருட்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பகுதிக்கும் சந்தைப்படுத்தவுள்ளதுடன் இலங்கையின் அனைத்து பகுதிக்கும் சந்தைப்படுத்தவுள்ளதாக பால் உற்பத்தி தொழிற்சாலையின் உரிமையாளர் நடனபாதம் ஜெகதீசன் தெரிவித்தார்.

இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் பால் முறையாக பயன்படுத்தப்படாத காரணத்தினால் வெளிநாட்டு பால் உற்பத்தி பொருட்களை நம்பியிருக்கும் நிலையேற்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் இந்த நிலைமை மாற்றப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைக்கழகம் மட்டக்களப்பு சமூகத்துடன் இணைந்து சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதற்கு அனைத்து பணிகளையும் ஏற்படுத்திவருகின்றது என இதன்போது கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தெரிவித்தார்.

இதேநேரம் கடந்த காலத்தில் பால்மாவைப் பெற்றுக்கொள்வதில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெரும் கஸ்டங்களை எதிர்கொண்டுவந்ததாகவும் இந்த தொழிற்சாலை ஊடாக எதிர்காலத்தில் மாவட்ட மக்கள் பால் உற்பத்தி பொருட்களை இலகுவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கையெடுத்தமைக்கு நன்றி தெரிப்பதாக இதில் கலந்துகொண்ட புத்தியுவிகள் தெரிவித்தனர்.



# அரச இலக்கிய விருது பெற்ற ஏ.நஸ்புள்ளாஹ்வால் கிழக்கிலங்கை கிண்ணியா சமூகம் பெருமிதம் அடைகிறது!



(அ.அச்சுதன்)

இலங்கை கிழக்கு மாகாணம் கிண்ணியா நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் கடமையாற்றும் ஏ.நஸ்புள்ளாஹ் வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகர்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற அரச இலக்கிய விருது வழங்கும் விழாவில் அவரது 'நான் மர்கய்யாமின் வாசகன்' நூலுக்காக சிறந்த கவிதை இலக்கியத்துக்கான' விருதினை பெற்றுக்கொண்டார்.

இவ்விருது அவரால் எழுதப்பட்ட பனிரெண்டாவது கவிதைத் தொகுப்பு நூலுக்காக வழங்கப்பட்டமையுடன் கிண்ணியா மண்ணிலிருந்து பெற்ற முதலாவது அரச சாகித்ய விருது என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மக்கள் வாழ்வாதாரத்தில் நலிந்து காணப்படுகின்றனர் அருட்பணி மாக்கஸ் அடிகளார்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் நிலையை அறிந்து செல்வதற்கு ஒரு குழுவாக வந்திருக்கின்றீர்கள். மன்னார் மக்கள் வாழ்வாதாரத்தில் நலிந்து காணப்படுகின்றனர். மன்னார் தீவு வெகு விரைவில் கடலுக்குள் அமிழ்ந்து போகும் அபாயத்துக்குள் உள்ளாகி விட்டது. இதை உங்கள் பகுதியில் மக்களுக்கு தெரியப்படுத்துங்கள். என மன்னார் பிரஜைகள் குழுவின் ஆளுநர் சபையின் உறுப்பினரும் தலைமன்னார் பங்குத் தந்தையுமான அருட்பணி மாக்கஸ் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

அனுராதப்புரம் கறிற்றாஸ் நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி மெனட் மெல்லவ அடிகளாரின் தலைமையில் சர்வ மதங்களையும் சார்ந்த 31 நபர்கள் கொண்ட பலதரப்பட்ட பாடசாலை ஆசிரியர் மதத் தலைவர்கள் இருபாலாரும் கொண்ட குழாம் ஒன்று சனிக்கிழமை (29.10.2022) இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு மன்னாருக்கு வருகை தந்திருந்தபொழுது மன்னார் பிரஜைகள் குழுவினரை சந்தித்தனர்.

இதன்போது மன்னார் பிரஜைகள் குழுவின் ஆளுநர் சபையின் உறுப்பினரும் தலைமன்னார் பங்குத் தந்தையுமான அருட்பணி மாக்கஸ் அடிகளார் இவ் குழுவினருக்கு மன்னாரின் நிலையை விளக்கி கூறுகையில்

கடந்த காலம் கடந்ததாகட்டும். இனிமேல் நாம் நிகழ்கால வாழ்க்கையைப்பற்றியே சிந்திக்க வேண்டும்.

இனியும் நாம் காலத்தை வீணே கடத்த முடியாது. இனியும் இவ் நாட்டு மக்கள் ஒன்றித்து வாழ முணையாவிடில் நாம் நிம்மதியாக வாழ முடியாத கட்டத்துக்கு வந்துவிட்டோம்.

மன்னார் மாவட்டத்தை பொறுத்தமட்டில் இங்குள்ள மக்கள் ஒற்றுமையாகவே வாழ்ந்தவர்கள். ஆனால் இங்கு தற்பொழுது அரசியல் மக்களை கூறு போட்டுள்ளது..

இனியாவது எதிர்காலத்தில் நாம் என்ன செய்ய வேண்டும் என சிந்திப்பதே சாலச் சிறந்ததாகும்.

இலங்கை அணி கிரிக்கெட் போட்டியில் ஈடுபடும்போது மன்னாரில் மின்சாரம் தடைப்பட்டு விட்டால் இங்குள்ள இளைஞர்கள் கொதித்தெழுகின்றனர்.

இதை எதைக் காட்டுகின்றது என்றால் எமது இளைஞர்கள் இன்னும் நாட்டுப்பற்றுடனே காணப்படுகின்றனர்.

மன்னார் தீவு 4 கிலோ மீற்றர் அகலமும் 20 கிலோ மீற்றர் நீளமும் கொண்டவை. ஆனால் இந்த மன்னார் தீவில் வடக்கு மற்றும் தெற்கு கடற்கரையோரமாக மீனவர்கள் குடியிருக்கும் பகுதியில் காற்றாலை அமைக்கப்படுவதால் மீனவர்கள் பாதிப்பு அடைவது ஒருபுறமிருக்க கனியவள மணல் அகழ்வால் விரைவில் மன்னார் தீவு கடலுக்குள் அமிழ்ந்துபோகும் அபாயம் தோன்றியுள்ளது.

பாடசாலை வளங்கள் இங்கு சமமாகப் பகிரப்படுவதில்லை. மன்னார் பெருந்நிலப்பரப்பு பகுதியில் விவசாயமும் காலநடையுமே பிரதான தொழிலாக காணப்படுகின்றது.

ஆனால் இன்னும் கால்நடைக்கு மேய்ச்சல் நிலம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.


மன்னாரில் போதைப் பொருள் இறக்குமதியும் பாவனையும் அதிகம். இது பொலிசாருக்கும் அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும். ஏவ்வாறு கடத்தப்படுகின்றது விற்பனையாளர்கள் பாவனையாளர்கள் யார் என்பது வெளிச்சம். ஆனால் கண்மூடிக் கொண்டு இருக்கின்றார்கள். இதனால்தான் போதைப் பொருள் அதிகரித்துச் செல்லுகின்றன என இவ்வாறு தெரிவித்தார்.





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த சூரசம்ஹாரம் ஆலய தலைவர் சுந்தர லிங்கம் சுரேஷ் தலைமையில் இடம்பெற்றபோது..படங்கள் காரைதீவு சகா, எஸ்.கார்த்திகேசு)

# பிள்ளையான் வியாழேந்திரன் முயன்றும் முடியாததை செய்து காட்டினார் தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் மோகன்



ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

My Number : PS/SB/Req. (2022)/SAS-4/02-I
Date : 17.10.2022

TEACHING HOSPITAL
21 OCT 2022
BATTICALOA.

Secretary
Ministry of Health

Governor
Central Bank of Sri Lanka

Dear Sir

**Urgent Request for Concrete Support to Complete Near- Completion Essential Clinical Buildings and to Procure Lifesaving Cath Lab Equipment at Teaching Hospital Batticaloa**

Forwarded herewith please find a letter on the above, received from Dr. K. Ganeshalingam, Director, Teaching Hospital, Batticaloa, addressed to the Hon. President for your intervention.

Accordingly, it is kindly requested to take appropriate action and keep Dr. K. Ganeshalingam, informed with a copy to this office.

Thanking you
Yours sincerely

Sgd. / E M S B Ekanayake
Secretary to the President

T N Ammon
Senior Assistant Secretary to the President
Tel: +94 11 2354422 Fax: +94 11 2446657
Email: sas3.secbure@presidentsoffice.lk

Copies:
(1). Secretary, Ministry of Finance, Economic Stabilization and National Policies — For your information and necessary action please.
(2). Dr. K. Ganeshalingam, Director, Teaching Hospital, Batticaloa — For your information please.

011 2354354

**(தீபன், ருத்திரன்)**

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் இருதய சத்திர சிகிச்சை பகுதி முடிவுறாத கட்டிடத் தொகுதியும் அதற்கான உயிர்காப்பு இயந்திர சாதனங்களும் இன்மையால் கடந்த சில வருடங்கள் தொட்டு மாவட்ட அரசியல்வாதிகள் பெரும் முயற்சி எடுத்து வந்தனர் காலம் கடந்தும் எதுவும் கைகூடாத நிலையில், அண்மையில் தனிப்பட்ட ரீதியாக மட்டக்களப்புக்கு விஜயம் செய்த நாட்டின் கௌரவ ஜனாதிபதி தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் அவர்களை சந்தித்து இருந்தார் அவ்வேளை வைத்தியசாலையின் அவசியம் அறிந்து போதனா வைத்திய சாலை வைத்திய பணிப்பாளர் உடன் இது சம்பந்தமான வைத்தியர்களையும் அழைத்துச் சென்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களை சந்திக்க ஏற்பாடு செய்து கொடுத்தார் தமிழ்உணர்வாளர் அமைப்பு தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் அவர்கள், நிலமைகளை விபரமாக கேட்டு அறிந்த ஜனாதிபதி அவர்கள் உடன் செயற்



பாட்டில் இறங்கினார் இதன் பொருட்டு இதற்கான சகலஏற்பாடுகளும் ஏற்பாடாகி வருகிறது. இது விடயமாக மத்திய வங்கி ஆளுனருக்கு அவச பணிப்புரை ஒன்றை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

# சில முஸ்லிம் அமைப்புகளின் தடை விரைவில் நீங்கும்

பாதுகாப்பு அமைச்சின் தடைப் பட்டியலில் உள்ள 11 முஸ்லிம் அமைப்புகளில் 6 அமைப்புக்கள் மீதான தடையை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இ இதன் முதற்கட்ட நடவடிக்கையாக குறித்த 6 அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகளுடன் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் அண்மையில் கலந்துரையாடியுள்ளதாகவும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர முதல்வர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை(30) இரவு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

தங்களது வேண்டுகோளில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பில் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்தார். 11 முஸ்லிம் அமைப்புக்கள் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 6 அமைப்புகள் எவ்வித பயங்கரவாத சம்பவங்களுடனோ பயங்கரவாத அமைப்புகளுடனோ தொடர்பைக் கொண்டிருக்கவில்லை எனவே, இவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டுமென நானும் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இஷாக் ரஹ்மானும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார். இதனடிப்படையில் தடை செய்யப்பட்ட குறித்த 6 அமைப்புகளின் முக்கியஸ்தர்களுடன் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் தனித்தனியே கலந்துரையாடியுள்ளனர்.

மேலும், குறித்த 6 முஸ்லிம் அமைப்புகளிடமிருந்தும் பாதுகாப்பு அமைச்சினால் சில ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் கிடைத்தவுடன் அதிகாரிகள் அதனை பரிசீலனை செய்து 6 அமைப்புகள் மீதான தடையை நீக்கவுள்ளனர் என்று மேலும் தெரிவித்தார்.

# வாழ்வாதார உதவிகள் வழங்களும் மாபெரும் கௌரவிப்பு நிகழ்வும் !!!





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**
**மட்டக்களப்பு**

மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி வழிபாட்டு மன்றத்தின் ஹரோ லண்டன் கிளையின் மூலம் வாழ்வாதார உதவிகள் வழங்களும் மாபெரும் கௌரவிப்பு நிகழ்வும் (30)மட்டக்களப்பு செங்கலடி செளபாக்கிய மண்டபத்தில் மிக விமர்சையாக இடம் பெற்றது.

இலங்கையில் பிறந்து கடல் கடந்து சென்று கர்நாடக சங்கீதத்தில் மேதையாக திகழ்ந்து இறை பதம் அடைந்த அமரர் சிவசக்தி சிவநேசன் ஆசிரியரின் முதலாம் ஆண்டு நினைவினை முன்னிட்டு கல்வியில் சாதனை படைத்தது பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவ, மாணவியர் , விளையாட்டு துறையில் சாதனை படைத்த வீர,வீராங்கனைகளுக்கும் சான்றிதல்கள் மற்றும் பதக்கங்கள்,கேடயங்கள் வழங்கி கௌரவிப்பு இடம்பெற்றதுடன்,தேவை உடையவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டதுடன் மாவட்டத்தில் பல்துறை சார்ந்து சேவையாற்றும் உயரதிகாரிகளுக்கு இதன் போது கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் .

மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி வழிபாட்டு மன்றத்தின் தலைவர் சமூகத் தொண்டர் க.துரைராஜா தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்.கணபதிப்பிள்ளை கருணாகரன் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட ஊடக அதிகாரி வடிவேல் ஜீவானந்தன்,செங்கலடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஸ்ரீநாத், வைத்திய நிபுணர் தமிழ்வண்ணன்,கிழக்கு பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளரான உமாசங்கர், செங்கலடி மத்திய கல்லூரியில் அதிபர் குகதாசன் என பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இவ் நிகழ்வில் மூத்த பிரஜைகளுக்கு ஆடைகள் வழங்கப்பட்டதுடன் நர்த்தன பவனம் நாட்டிய குழுவினர்களினால் கண்கவர் நடனம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

# கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தினால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு




**(ரவ்பீக் பாயிஸ் )**

திருகோணமலையில் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தின் இலிங்கநகர்,மட்கோ மற்றும் பூம்புகார் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 25 குடும்பங்களின் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு திருகோணமலை மட்கோ முதியோர் சங்க கட்டடத் தொகுதியில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பி லோஜினி அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை தட்ச்சாயினி ஆம்ஸ்ட்ரான் சியாகோ தனியார் நிறுவனம் மற்றும் சுவடுகள் அமைப்பின் நிதி உதவியின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டலில் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் ஆர்.எம் தம்மிக்க ராஜபக்ச,செயலாளர் எம்.எம்.வசந்த லங்காதிலக,பொருளாளர் அனுராதா சினவிரத்ன,மாவட்ட திட்டமிடல் உத்தியோகத்தர் லலித் கரன் திலக்க தேசிய அமைப்பாளர் லொகின் பரமேஸ்வரன் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் தவராஜசேகரம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் அகில இலங்கை சம்பியனான கிண்ணியா மத்திய கல்லூரிக்கு இம்ரான் எம்.பி வாழ்த்து.




**(ஹஸ்பர்)**

அண்மையில் அனுராதபுரத்தில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை கிரிக்கெட் போட்டியில் ஏறாவூர் மாக்கான் மாக்கார் மகா வித்தியாலயத்தை தோற்கடித்து சம்பியனான கிண்ணியா மத்திய கல்லூரிக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாகவும் எதிர்காலத்தில் பல சாதனைகளை படைப்பதற்கு பிராத்திப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

மேலும் இவ்வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், பயிற்சியாளர், பொறுப்பாசிரியர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் அவரது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

## 21 வது யாப்புத்திருத்தத்தை

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது தவறல்ல சரியானது


ஜி.ஸ்ரீநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

21வது திருத்தம் 20வது திருத்தத்தை விட நல்லது,ஓரளவேனும் வரவேற்கத்தக்கது.21வது திருத்தத்தை எதிர்த்தால்,நாம் மொட்டுக்கட்சியினரின் 20ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்வதாக அமைந்துவிடும்.இதனை தமிழத்தேசியத்தின்பால் சிந்திக்கும் ஒவ்வொரு தமிழனும் அறிவர்..

20வது திருத்தத்தில் காணப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் ஓரளவாவது குறைக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுக்கள் பலவற்றின் சுயாதீன செயற்பாட்டை 20வது திருத்தம் பறித்து ஜனாதிபதியிடம் வழங்கியது,ஆனால் 21வது திருத்தம் ஆணைக்கழுக்கள் சுயாதீனமாக செயற்பட வழிகோலியது.

பசில் போன்றவர்களுக்காக இரட்டைக் குடியுரிமையை 20வது திருத்தம் ஏற்றுக் கொண்டது.அதனை 21வது திருத்தம் அகற்றியது. 10 பேர் கொண்ட அரசியலமைப்புப்பேரவையை 20 வது திருத்தம் அகற்றி ஜனாதிபதிக்கு ஏகபோக அதிகாரத்தை 20 வது திருத்தம் வழங்கியது.ஆனால் 21வது திருத்தம் மீண்டும் அரசியலமைப்புப்பேரவையைக் கொண்டுவந்துள்ளது.இதன் மூலம் ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக இயங்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பசில் அணியினர் பாராளுமன்றத்தை நான்கரை ஆண்டுகளின் பின்னர்தான் ஜனாதிபதி கலைக்க அதிகாரம் அளிக்க வேண்டும் என்று அடம் பிடிதனர்.மக்கள் விரும்பாத பாராளுமன்றத்தை நீடித்து தமது செல்வாக்கை அதிகரிப்பதே பசிலினதும்,மொட்டினதும் திட்டமாகும் அத்திட்டம் 21 ஆல் முறியடிக்கப்பட்டுள்ளது.

மொட்டுக்கட்சியின் ராஜபக்சக்களின் தீவிர ஆதரவாளர்களே 21வது திருத்தத்தினை கடுமையாக எதிர்த்தனர்,ஆனால் தாம் வாக்கெடுப்பில் தோல்வி அடைவோம் என்பதை அறிந்த பின்னர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.அவர்களது நிலைப்பாட்டை த.தே.கூஇல் எவரும் எடுக்க வேண்டும் என்று தமிழர்கள் எதிர்பார்க்கவில்லை.எதிர்த்து வாக்களித்த சரத்வீரசேகரவின் நிலைப்பாடு சரியென்று நமது உறுப்பினர்கள் பாராட்ட வேண்டியதும் இல்லை.

தன்முனைப்பான எதேச்சையான முடிவுகளைவிட,தமிழ்த்தேசிய மக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க பெரும்பான்மை உறுப்பினர்களின் அர்த்முள்ள முடிவுகளையே தமிழர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.இதனை அனைவரும் அறிந்தால் முரண்பாடுகளைத் தவிர்கக முடியும்.

# வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களின் நடை பவனி






















**(ந.குகதர்சன்)**

கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களின் நடை பவனி 29.10.2022 சனிக்கிழமை இடம்பெற்றது.

பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலையின் அதிபர் எஸ்.சந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்ற நடை பவனியில் பாடசாலையில் மூத்த கல்வியலாளர்கள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதில் 2002 உயர்தர மாணவர்களின் கேக் வெட்டி நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், பாடசாலையில் கடமையாற்றி மரணித்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையின் மைதானத்தில் இருந்து ஆரம்பமான நடை பவனி கல்குடா வீதி வழியாக வாழைச்சேனை பிரதான வீதி, முல்லை வீதி, விநாயகபுரம் வீதி வழியாக பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலய வீதி, பேத்தாழை மயான வீதி வழியாக பேத்தாழை கல்குடா வீதியினூடாக வருகை தந்து வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையினை வந்தடைந்தது.

குறித்த நடை பவனியில் வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையின் பான்ட் மாணவர்களின்வரவேற்புடன்கோலாட்டம், கரகாட்டம், சுளகாட்டம் என்பன இடம்பெற்றதுடன், பாடசாலையில் சாரணிய மாணவர்கள், சிப்பாய் படையணி மாணவர்கள், சுற்றாடல் பகுதி மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், மாணவ தலைவர்கள், ஆசிரியர்கள் சகிதம் பவனியாக கலந்து கொண்டனர். அத்தோடு 1998ம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்கள் தொடக்கம் 2021ம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்களினால் வாகனங்கள் வடிவமைக்கப்பட்டதுடன், இசை முழக்க பழைய மாணவர்களின் வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் நடனமாடி பழைய மாணவர்கள் நடை பவனியில் கலந்து கொண்டனர். குறித்த நடை பவனியினை பார்வையிடுவதற்கு பெரும்பாலான மக்கள் வீதியோரமாக நின்று பார்த்து மகிழ்ந்ததுடன், வாழைச்சேனை பிரதேசத்தில் இடம்பெற்ற முதலாவது பாடசாலையில் நடை பவனி என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறைக்குள் ஓர் சிற்பி:
# இருட்டுச் சிறைக்குள் இலக்கியம் படைக்கும் சிவலிங்கம் ஆரூரன்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

பொண்ணும் பதவியும் புழுதிற்கு நிகர்உன்னில் இருக்கும் ஓங்கார மாசக்தி ஓங்கி எழட்டும்.


விடுதலை என்றும் பற்றாய் வளரட்டும்என ஈழப்போராட்ட அமைப்பு ஒன்றின் சத்தியப்பிரமாணம் தாயக மண்ணில் முழங்கிய காலம் பலருக்கும் நினைவிருக்கலாம்.


பதவிக்கும், சொகுசு வாழ்க்கைக்காகவும் அலையும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமது இளம் வாழ்க்கையை இந்த மண்ணுக்காக ஆகுதியாக்கியவர்களை தமிழர் தேசம் ஒரு போதும் மறவாது.

தனது இளமையை சிறையில் தொலைத்த தமிழ் அரசியல் கைதியான சிவலிங்கம் ஆரூரன் எழுதிய 'ஆதுரசாலை'என்ற தமிழ் நாவலுக்கு சிறந்த நாவலுக்கான 2022ம் ஆண்டுக்கான அரச இலக்கிய விருது

வழங்கப்பட்டதை தமிழ் கூறும் உலகே பெருமைப்படுகிறது.








### சிறைக்குள் ஓர் சிற்பி :

2022ம் ஆண்டுக்கான அரச இலக்கிய விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்விலேயே அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

வடமராட்சி திக்கத்தினை சேர்ந்த ஒரு பொறியியல் பட்டதாரியான சிவலிங்கம் ஆரூரன் பேராதனை பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை ( Master degree ) தொடரும் போது கைது செய்யப்பட்டார். கடந்த 2006ம் ஆண்டு கொழும்பு பித்தளை சந்தியில் அப்போதைய பாதுகாப்பு செயலர் கோத்தாபாய மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பில் சந்தேகநபராக சிவலிங்கம் ஆரூரன் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.




பதினாறு வருடங்களாக சிறைவாசம் அனுபவித்துவரும் சிவலிங்கம் ஆரூரன் எழுதிய 'ஆதுரசாலை' என்ற நாவலுக்கு, இலங்கை அரசு ஆண்டுதோறும் நடத்துகின்ற இலக்கிய விழாவில் 2022 ஆம் ஆண்டுக்குரிய சிறந்த தமிழ் நாவல் விருது வழங்கப்பட்டுள்ளது. கடந்த பதினாறு ஆண்டுகளாக, இலங்கையில் பல்வேறு சிறைகளிலும் அரசியல் கைதியாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

சிறையிலிருந்து இவர் இதுவரை ஒரு ஆங்கில நூல் அடங்கலாக எட்டு புத்தகங்களை எழுதியுள்ளார். 2016 இல் இவர் இலங்கை அரசு வழங்கிய சிறந்த தமிழ் நாவலுக்கான அரச சாஹித்திய விருதைப் பெற்றிருந்தார்.

### 'ஆதுரசாலை' சிறந்த தமிழ் நாவல் விருது :

சிவ.ஆரூரன் அவர்கள் ஈழத்து நாவல் உலகிற்கு கிடைத்த அருமையான படைப்பாளி. சிறைக்கம்பிகளுக்குள் அவரது வாழ்வு முடக்கப்பட்டுள்ள போதிலும், சோர்ந்து விடாது தொடர்ச்சியாக சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் எழுதி வருகின்றார். எமது மண்ணின் மீதும் மனிதர்கள் மீதும் கொண்ட பற்று இவரது படைப்பாக்கங்களில் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டு வருவதை நாம் காண்கின்றோம். அநேகமான இவரது படைப்புகளில் சமூக சிந்தனையும் எதிர்கால நோக்கும் உச்சமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும். இந் நாவலும் அவ்வாறானதொரு நாவலே.

எமது மண்ணின் வைத்தியர்கள் பலர் போர்க்காலங்களில் எந்தவித ஆதாயத்தையும் கருத்தில் கொள்ளாது உயிர் ஒன்றை காப்பாற்றி விட வேண்டும் என்ற நோக்கை மட்டுமே கருத்திற் கொண்டு செயற்பட்டு வந்தமையையும் அவர்களது அர்ப்பணிப்பான சேவையையும் கண்ணுற்று வந்த நாம் இன்று வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறை நிகழ்வதைக் கண்ணுற்று வந்த நாம் இன்று வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறை நிகழ்வதைக் கண்ணுற்று வருகின்றோம். ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது? எமது வைத்தியர்கள் எங்கே? ஏன் இந்த வெளிநாட்டு மோகம்? எமது வைத்தியசாலைகள் சில ஏன் மூடப்படுகின்றன? என்பதற்கு இந்த நாவல் விடை பகிருகின்றவேளை, முடங்கிக் கிடந்த வைத்தியசாலை ஒன்று புத்தாக்கம் பெற்று எழுச்சி அடைந்த கதையாக இந்நாவல் அமைகின்றது.

கதை சொல்லல் முறைமை, சமூக நோக்கான சிந்தனைகள், பாத்திர வார்ப்பு, மொழிப்பிரயோகம் என்பவற்றால் இந்நாவல் உயர்ந்து நிற்பதோடு ஆரூரனின் எழுத்தின் வீச்சு உச்சம் பெற்று வருவதையும் இந்நாவல் வாயிலாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஆரூரனின் ஆறாவது நாவல் இது. இவரது ஏனைய நாவல்களும் பல விருதுகளைப் பெற்று வாசகர்கள் இடையே ஆரூரனின் தனித்துவமானதாக அமையப் பெற்றுள்ள நிலையில் இந்நாவலின் வருகை வாசகரிடையே மேலும் வரவேற்பை பெறும் என்ற நம்பிக்கையை தருகின்றது.

### சிவ.ஆருரனின் யாழிசைசமூக நாவல்

இனத்தின் வலியைச் சுமந்து சிறையில் துன்புற்று வாழும் இந்த நூலாசிரியரின் சிறைக்குள் இருந்து மலரும் இசையாக இந்த யாழிசைவெளிவந்துள்ளது.

சிறை வாழ்வில் இனி ஏது வாழ்வு என நொடிந்து துன்புறும் சிறை வாழ்வாளர்களிடையே சிறைக்குள் இருந்தாலும் எழுதுகின்ற வேட்கையை எவராலும் பூட்டி வைக்க முடியாது என மெய்ப்பித்திருக்கும் இவரின் எழுத்துகள்.

வன்னி மாவட்ட மாணவர்கள் சிக்கல்களை - மையப்படுத்தியதாக நகரும் கதையில் ஆதிக்க வன்கொடுமையாளர் கோரப் பிடிக்குள் சிறைக் கம்பிகளுக்குள் இருந்து எழுதப்பட்டுள்ளது இப்புதினம். நானூறு பக்கங்களைக் கொண்ட இந்தப் புதினத்தில் வன்னி மண்ணின் அழகியலை வாழ்வியல் வலிகளைச் சமூக மாந்தர் வாழ்வியல் சுமைகளை வைத்து அழகாகக் கதை நகர்கின்றது. சிவலிங்கம் ஆரூரன் மகசின் சிறைச்சாலையில் இருக்கும் போது எட்டு தமிழ் மொழிப் படைப்புகளையும் ஒரு ஆங்கில மொழிப் படைப்பையும் எழுதி சிறைக்குள் ஓர் சிற்பியாக தெறிக்கின்றார்.

### The Innocent Victims :

இந்த நூலாசிரியரின் The Innocent Victims எனும் ஆங்கில நாவலை சிறைக்குள் இருந்து எழுதியுள்ளார்.

ஒரு விதவை தாய், அவர் வேலை செய்யும் இடத்தில் ஒருவர் அந்த தாய்

மீது காதல் கொண்டு மறுமணம் செய்து கொள்ளும் கதையை அடிப்படையாக கொண்டது. அதனூடாக மறுமணம் தொடர்பில் பேசியுள்ளார்.

சிவ.ஆருரனின் நாவல்கள் எவற்றிலும் அரசியல் இல்லை மக்களின் வாழ்வியலை பேசும் நாவல்கள். அவரது தமிழ் நாவலான யாழிசை நாவல் 2015ஆம் ஆண்டுக்கான சிறந்த நாவலுக்கான சாகித்திய மண்டல பரிசினை பெற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது,

இந் நாவலுக்கான விருதினை அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனாவின் கைகளால் ஆரூரனின் தந்தை பெற்றுக்கொண்டார். அப்போது, ஜனாதிபதியிடம் தனது மகனை சிறையிலிருந்து விடுவிக்குமாறு மன்றாட்டமாக கேட்டுள்ளார். அதற்கு அப்போதைய ஜனாதிபதி சாதகமாக பரிசீலித்து முடிவெடுப்பதாக உறுதி அளித்துள்ளார். ஆனாலும் அவரது விடுதலை இன்னமும் சாத்தியமாகவில்லை.

சிறையில் உள்ள மகன் ஒரு எழுத்தாளனாக, அதுவும் சாகித்திய விருது பெற்ற எழுத்தாளனாக வருவான் என தந்தை கனவிலும் ஒருபோதும் நினைக்கவில்லை. தன் மகன் குடும்ப வாழ்வில் சிறப்பாக வாழுவான், கலாநிதி கற்கையை முடித்து கலாநிதியாக வருவான் என எதிர்பார்த்த தந்தையின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. விடுதலைக்காக ஏங்கி நிற்கும் இந்த தந்தையை போல, இன்னும் பல தமிழ் தந்தையர்கள் கண்ணீருடனேயே தம் வாழ்வின் அஷ்த்தமனத்தை சந்திக்கின்றனர் என்பது காலக் கொடுமையாகும்.

ஆனாலும், தமது இளம் வாழ்க்கையை இந்த மண்ணுக்காக ஆகுதியாக்கியவர்களை தமிழர் தேசம் ஒருபோதும் மறவாது. இந்த இளம் எழுத்தாளனையும் வரலாறு ஓர் நாள் விடுதலை செய்யும் எனும் நம்பிக்கைகளுடன்...

## சுவிஸ் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ் புத்தகக் கண்காட்சியும், நூல் விற்பனையும்

சுவிஸ் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ் புத்தகக் கண்காட்சியும், நூல் விற்பனையும் சூரிச் நகரில் நடைபெற உள்ளன. Experitheater அமைப்பின் ஏற்பாட்டில் நவம்பர் 12, 13ஆம் திகதிகளில் நடைபெறும் இந்த நிகழ்வினை ஊடகரும், அரசியல் செயற்பாட்டாளருமான எம். பௌசர் ஒருங்கிணைப்பு செய்துள்ளார்.

இந்த நிகழ்வில் குழந்தைகளுக்கான நூல்கள் உட்பட நேரடி தமிழ் நூல்கள் மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களைக் க் கொள்வனவு செய்ய முடியும். தங்கள் வாசிப்புக்குத் தேவையான நூல்களை முன்கூட்டியே தெரிவித்து அவற்றைப் பெற்றுக் கொள்ளும் வசதியும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

